## வெலிகம பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 2,973,826 தொகை பெறுமதியான கட்டிடங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அந்தப் பெறுமதியினை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்காத இரண்டு நிர்மாணவேலைகளுக்காக ரூபா 2,201,681 இற்கான கடன் கொடுத்தோர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிர்மாண வேலை விடயம் சமர்ப்பிக்கும் தகவல்களின் அடிப்படையில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதி ரூபா 310,864 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | விலைப்பட்டிகள் பரிசோதனைக்கு சமர்க்கும் போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்டுள்ள மேலதிக வேலைகளின் பெறுமதிக்காகவும் பெறுமதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாணவேலை பண்டங்களின் இருப்பு ரூபா 84,598 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்படட்டிருந்தது. | இருப்புக்கள் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் | இரட்டிப்பு வழி ஒன்று ஏற்பட்டிருந்தது. |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 193,650 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக நீதிமன்றத் தண்டம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அப்பெறுமதி மதிப்பீட்டுத் பெறுமதி ஒன்று என காட்டப்படுவதுடன் அட்ட வணைகள் கிடைத்த பின்னர் அந்த உண்மை பெறுமதிகளின் மீது குறைந்த மற்றும் கூடிய பெறுமதிகளை சீராக்கல் செய்யப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது வருடாந்த கணிப்பீடு ஒன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (ஆ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய பபா/ பபாகொ/2010/1 இலக்கச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு சொந்தமான நான்கு வர்த்தக கட்டிடத் தொகுதியை சேர்ந்த ஆறு கடைகளில் உடன்படிக்கைக்கான நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மீண்டும் ஞாபகப் படுத்தும் கடிதம் அனுப்புவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,505,655 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 63,645,269 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,955,200 | 3,610,693 | 3,424,594 | 1,539,912 | 4,590,500 | 5,496,311 | 5,311,532 | 1,353,812 |
| வாடகை | 3,735,600 | 3,245,491 | 2,654,143 | 1,352,900 | 3,657,500 | 3,066,989 | 2,893,534 | 761,552 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 5,667,500 | 11,112,302 | 10,809,302 | 1,803,000 | 4,175,500 | 7,809,196 | 6,363,346 | 1,500,000 |
| ஏனைய வருமானங்கள் | 60,655,000 | 78,512,849 | 33,411,971 | 184,136,728 | 54,370,600 | 61,101,942 | 7,969,035 | 139,035,850 |
| மொத்தம் | 74,013,300 | 96,481,335 | 50,300,010 | 188,832,540 | 66,794,100 | 77,474,438 | 22,537,447 | 142,651,214 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 74,013,300 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 142,651,214 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 96,481,335 தொகை உடன் ரூபா 239,132,549 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 50,300,010 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 188,832,540 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 21 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஒட்டு மொத்தமாக 97 சதவீத த்தையும் பிரதி நிதிப்படுத்துவது முத்திரைக் கட்டணம், நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் வீதி விளக்கு மீளளிப்புச் செய்ய வேண்டிய பெறுமதி யாகும். அத்தொகை அரச நிதியத்திலிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டிய நிலுவைத் தொகையாக இருந்ததுடன் வெளி நபர்களிடம் அறவிடப்பட வேண்டியது ஒட்டுமொத்த நிலுவையில் 3% சதவீதம் ஆகிய சிறிய அளவேயாகும். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **வீதவரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 1,192,409 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 306,660 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,499,069 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 142,509 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,356,560 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்றம் 10 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்துவதன் மூலம் இந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 110,254 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 11,197 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 121,451 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,290 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 120,161 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்றம் சதவீதம் நூற்றிற்கு ஒன்றாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு பதிவு செய்யப் பட்டுள்ள காணிகளை இனங்கண்டு வரித்தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 761,552 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 3,245,491 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 4,007,043 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,654,143 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,352,900 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 1,500,000 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 11,112,302 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 12,612,302 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 10,723,702 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,888,600 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளன. |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 14,284,993 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 167,958,954 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பணம் அறவீடு செய்வதற்காக உரிய நிறுவுனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.6 மிகை விதிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது ரூபா 7,750,286 இற்கான பெறுமதிக்கான 10 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மிகை விதிப்புக்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக சான்றுபடுத்திய பிரதிகள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப் பட வேண்டியிருந்த செய்பணிகள் அனைத்திற்குமாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.1.2 செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதன்கல தகனகூடம் நிர்மாணித்தலில் தாமதம் | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்ட இடையில் நிறுத்தப் பட்டிருந்ததுடன் தகனகூடம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த மீதிப் பணம் பிரதேச சபையின் கணக்கிற்கு பெற்றுத் தருமாறு 2010 ஜனவரி 21 திகதி வெலி/பிச/ஆதஹ/11/2006 இலக்க கடிதத்தின் மூலம் விண்ணப்பித்திருந்த போதிலும் அந்தப் பணம் கிடைத்ததனை ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. |
| (ஆ) | வரகாபிடிய தகனகூடம் நிர்மாணிப்பதில் தாமதம் | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017/2018 ஆண்டின் போது மீண்டும் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ரூபா 45,000,000 இற்கான தொகையொன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட புறநெகும செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப் படுகின்றது. |
| (இ) | தெனிபிடியவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள பொருளாதார நிலையத்தை நிர்மாணிப்பதில் தாமதம் | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் பாதீட்டு மூலம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 3.1.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குப்பைகளை அகற்றுவதற்காக பரிமாற்றம் செய்திருந்த 01 ஏக்கர் 01 ரூட் 2.8 பர்சஸ் அளவுடைய கலாடுவ கடொலான என்ற காணியில் குப்பைகளை அகற் றுதல் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக 2015 ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்தது. | உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். | தாழ்நில அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தானத்தின் விதப்புரையை பெறுவதற்காக அனுப்பியுள்ளதுடன் அந்த விதப்புரை கிடைத்த பின்னர் அங்கு குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்தை செயற்படுத்து வதற்கு திட்டமிட்டுள்ளதுடன் இவ் ஆண்டின் போது செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | பொல்அது மோதர ஆற்றுக் காப்புப் பகுதியில் 03 காணிகளில் சட்டரீதியற்ற முறையில் குப்பை கள் போடப்பட்டு மண்ணினால் மூடுதல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். | கம்புறுகமுவ கராடுவ காணிக்காக பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக தனியார் காணியில் மற்றும் பொல்அதுமோதர ஆற்றின் காப்புப் பகுதியில் குப்பைகள் அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டதுடன் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதத்தினை குறைப்பதற்கு மண் போட்டு மூடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (இ) | தனியார் காணிகளில் அகற்றப் பட்ட குப்பைகளை மூடுவற்காக மண் போடுவதற்காக 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபையின் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்காக ரூபா 1,709,935 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். | சுற்றாடலுக்கு ஏற்படும் சேதத்தை குறைப்பதற்காக மண்போட்டு மூடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக மண் எடுத்து செல்வதற்கு சபையின் வாகனங்கள் மற்றும் மண் வெட்டுவதற்காக பெக்கோ இயந்திரத்தை பயன்படுத்த ப்பட்டது. அதற்காக ரூபா 1,709,935 தொகை செலவிடப்பட்டது. |

### 3.1.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபை யினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களை அளவை செய்வதற்காக சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்குவதற்கான முன்னேற்றத்தினை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தற்போது தயாரிக்கப் பட்டு பூர்த்தி செய்யப்பட்டு ள்ளது. |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| பதவியணித் திட்டத்தினை அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 27 மிகைப் பதவி யணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப்ப டுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்காக உள்ளு ராட்சி ஆணையாளர் ஊடாக முறைப்படுத்துவதற்காக நடவ டிக்கை எடுக்கப்படுகின்றது. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையின் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்துவதை புறக்கணித்து ள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 105,930 தொகைக் கான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய் வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் தொகையை அறவிடப்பட வேண்டும். | பணம் அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது கடைத்தொகுதியில் 10 வடைகள் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்ட பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த பெறுமதி மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,700 தொகை முதல் ரூபா 3,400 தொகை இடைப்பட்டு காணப் பட்டது. எனினும் கடைகளை திருத்தாமையினால் இந்த புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | சொத்துக்களை பராமரித்து வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்த வேண்டும். | 2019 பாதீட்டின் கீழ் மிரிஸ்ஸ பகுதியில் வர்த்தக கடைத் தொகுதி ஒன்று நிர்மாணிப் பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

#### 3.3.2 சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெனிபிடிய, வெலிப்பிடிய மற்றும் ஜயவிக்ரமபுர வர்த்தக கடைத் தொகுதிகளில் அமைந்துள்ள 14 கடைகள் பிரதான பாதையில் இருந்து தூரத்தில் அமைந்து ள்ளதால் பொது மக்கள் அவற்றுடன் தொடர்பு கொள்ளல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. சபையினால் இந்த கடைகளை வாடகைக்கு கொடுப்ப தற்கான முறையான நடைமுறை யொன்று கடைபிடித்திருக்கவில்லை. | சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வரு மானங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு 06 கடைகளை திருத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன். |

### 3.3.3 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 கட்டிடங்கள் பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பயன்தரும் கருமங்களில் ஈடுபடுத்த வேண்டும். | தெனிபிட்டியவில் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட விஷேட பொருளாதார நிலையக் கட்டிடத்தை பயன்தரும் விதத்தில் நிர்மாணிப்பதற்காக 2019 ஆண்டின் போது பாதீட்டில் பிரேரிக்கப்பட்டுள்ளது. துருக்கி கிராமத்தில் சனசமூக நிலையக் கட்டிடம் கலாச்சார நிலையக் கட்டிடம் மற்றும் ஜயவிக்ரம புற சந்தையின் கட்டிடம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 செலவு விடயங்களில் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 18,764,069 தொகையாகக் காணப்பட்டதுடன் அப்பெறுமதிகள் 05 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஒட்டுமொத்தமாக மதிப்பீட்டு மொத்த வருமானத்தில் 10% அனுகூலமான முரண்களும் மற்றும் மதிப்பீட்டுச் செலவில் 15% அனுகூலமான முரண்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீட்டில் உற்பத்தித் திறன் ஒன்று காணப்பட்டது. |
| (ஆ) | 03 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 10,260,640 ஆகக் காணப்பட்டதுடன் அப் பெறுமதிகள் 09 சதவீதம் முதல் 16 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஒட்டுமொத்தமாக மதிப்பீட்டு மொத்த வருமானத்தில் 10% அனுகூலமான முரண்களும் மற்றும் மதிப்பீட்டுச் செலவில் 15% அனுகூலமான முரண்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீட்டில் உற்பத்தித் திறன் ஒன்று காணப்பட்டது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/ 01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது செயற்படுத்த உத்தேசித்துள்ள உள்ளகக் கணக்காய்வு திட்டம் கணக்காய்வாளர் அதிபதிக்கு 2019 ஜனவரி 11 ஆம் திகதி அனுப்பப்பட்டது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தை பெற்று இருந்த துடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தி ருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் கால சட்டகத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் தற்போது செய்யப்படுகின்றது. |